# மறுபடியும் , உன்னைக் கட்டுவிப்பேன். நீ கட்டப்படுவாய் எரே 31 : 4

சகோதரனே சகோதரியே,

**கர்த்தர் உன்னை கட்டுவிப்பார். நீ கட்டப்படுவாய்;** என இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். ஆமென் அல்லேலூயா.

**மறுபடியும் உன்னைக் கட்டுவிப்பேன் நீ கட்டப்படுவாய் என கர்த்தர் கூறக் காரணம் என்ன தெரியுமா?**

அநாதி சிநேகத்தால் உன்னை சிநேகித்தேன். ஆதலால் காருணியத்தால் உன்னை இழுத்துக் கொள்கிறேன்– என்பதாக.

மறுபடியும் நீ மேள வாத்தியத்தோடும், ஆடல் பாடல் செய்கிறவர்களின் களிப்புள்ள கூட்டத்தோடும் புறப்படுவாய். மறுபடியும் சமாரியாவின் மலைகளிலே திராட்சத் தோட்டங்களை நாட்டுவாய்.

நான் ஒரு இடிந்து போன, பாழான வீடு. மண்மேடு என்று நினைக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே, உன்னைத் தேற்றுவதற்காகவே தேவ வசனம் கடந்து வருகிறது. நீ சொல்வது, நினைப்பது முற்றிலும் உண்மையே. நீ ஒரு உடைந்த பாத்திரம்.

ஆனாலும் **மறுபடியும் கர்த்தர் உன்னை கட்டுவிப்பார். நீ கட்டப்படுவாய்**! கலங்காதே!

**பக்தன் பாடுகிறார். .**

நெஞ்சமே நீ அஞ்சிடாதே,
நம்பினோரை கிருபை சூழ்ந்திடுதே
இம்மட்டும் காத்தவர் இம்மானுவேல்
இன்னமும் காத்து உன்னை நடத்துவார் – அல்லேலூயா!

பயப்படாதே, உன் நம்பிக்கை வீண்போகாது. நேற்று காத்த தேவன், இன்று உன்னை காக்க மாட்டாரா ? கட்டாயம் காப்பார். நிச்சயம் காப்பார். கைவிடாது காப்பார். செட்டையின் கீழ் அரவணைத்துக் காப்பார். மலையின் உச்சியில் கொண்டுபோய் காப்பார்.

**சங்கீதம் 127 : 1 சொல்கிறது :** கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா – என்பதாக.
**1 கொரி. 3 : 7 சொல்கிறது,** நடுகிறவனாலும் ஒன்றுமில்லை; பாய்ச்சுகிறவனாலும் ஒன்றுமில்லை.
விளையச் செய்கிற தேவனாலே எல்லாம் ஆகும். – என்பதாக.

ஆம்! சகோதரனே,

மறுபடியும் **கர்த்தர் உன்னைக் கட்டுவார். கட்டப்படுவாய்.** உன்னுடைய குடும்பத்தினர் உன்னை கட்ட முடியாது, நண்பராலும் முடியாது, மனைவியாலும் முடியாது, புருஷனாலும் முடியாது, குழந்தைகளினாலும் முடியாது, விசுவாசியாலும் முடியாது, ஊழியக்காரராலும் முடியாது. **கர்த்தரால் மட்டுமே ஆகும்.** அல்லேலூயா! எப்பொழுதும் கர்த்தரையே நோக்கிப் பாருங்கள். உங்கள் இருதயத்தை ஆராய்ந்து அறிகிறவர் தேவன் ஒருவரே.

**சங்கீதம் 127 : 2,4 சொல்கிறது, :** கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். – என்பதாக.

காவலாளர் எவ்வளவு விழித்திருந்தாலும், **கர்த்தர்** நகரத்தை காவல் செய்யாவிட்டால், விருதா. ஆதலால் கர்த்தரையே நம்புங்கள்.

**சங்கீதக்காரர் சொல்கிறார்,** யாக்கோபின் தேவனை துணையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் – என்பதாக.

இடிந்து கிடப்பது வியாபாரமா அல்லது விவசாயமா ? அல்லது குடும்ப வாழ்க்கையா, நட்பா அல்லது வெளிநாட்டு வேலைகளா ? எதுவாக இருக்கட்டுமே. **தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை.**

உன்னுடைய வாழ்க்கையே இடிந்து போனது உண்மை. ஆனால் வேதம் சொல்கிறது, **'மறுபடியும் உன்னை கட்டுவிப்பேன்' நீ கட்டப்படுவார்** – என்பதாக.

உங்கள் விசுவாசத்தைக் கீழ்க்கண்டவாறு அறிக்கையிடுங்கள்.

**கர்த்தர், மறுபடியும் என்னை கட்டுவிப்பார். நான் கட்டப்படுவேன்** – என்பதாக பலமுறை சொல்லுங்கள்.

**வேதம் சொல்கிறது,**

**"நீ விசுவாசிக்கிறபடியே உனக்கு ஆகக்கடவது"** – என்பதாக.

வாக்குத்தத்தத்தை பிடித்துக் கொள்ளுங்கள். நம்பிக்கையோடு உச்சரியுங்கள். பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள். சாட்சி கூறுங்கள். கர்த்தரை மகிமைப்படுத்துங்கள். ஆமென்.